சுருக்கம்

பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு. வி. கௌதம் (த/பெ (மறைந்த) திரு. கி. விசுவநாதன்) என்பவருக்கு 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி(தொ.க.1(2)) துறை

அரசாணை (2டி) எண்.7

நாள்: 08.01.2024
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்,
மார்கழி மாதம் 23

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 26.02.2021.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.55154/ஜே/இ4/2023, நாள் 21.09.2023.

******

ஆணை:-

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு. வி. கௌதம் என்பவர் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் தந்தை திரு. கி. விசுவநாதன் என்பார் சேலம் மாவட்டம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த போது பணிக்காலத்தில் 18.03.2015 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.வி.கௌதம் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 03.06.1991 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களது பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், சேலம் மாவட்டம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. கி. விசுவநாதன் என்பவரின் வாரிசான அவரது மகன் திரு. வி. கௌதம் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரியும் அவரது பணியினை, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவரது நியமன நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. குமரகுருபரன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர் (தனியரது பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றிதழ் இணைப்புடன்)

**<u>நகல்</u>**:-

பள்ளிக் கல்வி (அநமு பிரிவு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

09/01/2024
பிரிவு அலுவலர்.

9.1.2024